நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 340/2022

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணியன் |
| தந்தை / கணவர் பெயர் | : | K.M. ராமன் |
| கிராமம் | : | காரிமங்கலம் |
| வட்டம் | : | காரிமங்கலம் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 57 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 06–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.25PM

1. நான் தற்போது தாரமங்கலம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 2022 ம் வருடம் மேட்டூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். மாதேஷ் மனைவி மகேஷ்வரி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண்.28/2022 ச.பி. 279, 337 இ.த.ச

வின் கீழ் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம் வழக்கு பதிவுசெய்து பின்னிட்டு சிகிச்சை பெற்றுவந்த கோபால் இறந்துவிட்டதால் இந்த வழக்கின் சட்டபிரிவை 279, 304(A) இ.த.ச வின் கீழ் மாறுதல் செய்து பின்னிட்டு மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2. நான் 17.03.2022 ம் தேதி காலை 05.00 மணிக்கு மேற்படி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம் என்பவரிடம் இருந்து வழக்கு கோப்பினை பெற்று வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தேன். பின்பு காலை 06.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடமான மேட்டுர் டு பவானி மெயின்ரோடு காவேரி கிராஸ் பஸ் ஸ்டாப் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டேன்.
3. பின்னிட்டு சாட்சிகளை விசாரணை செய்தேன். சம்பவயிடமானது சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தயாரித்த மாதிரி வரைபடம், பார்வை மகசர் போல் இருந்ததாலும் தனியாக நான் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை. மேலும் சாட்சிகளும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளரிடம் சொன்னது போல் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் நான் பதிவுசெய்யவில்லை.
4. பின்னிட்டு காலை 08.30 மணிக்கு சேலம் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கின் முன்பு இந்த வழக்கில் இறந்துபோன கோபால் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் மாரியம்மாள், மகேஷ்வரி, நாகராஜன், சிவகாமி, வெங்கடேசன் ஆகியோர் முன்பு காலை 08.30 மணிமுதல் காலை 11.00 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாரியம்மாள், மகேஷ்வரி, ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்தேன்.
5. பிறகு விபத்தில் இறந்துபோன கோபாலின் இறப்புக்கான காரணம் அறியும்பொருட்டு காவலர் 2154 உமாசெல்வம் என்பவரிடம் ஒப்படைத்தேன். அவர் பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடித்து முறைப்படி அவர்களுடைய உறவினர்களிடம் ஒப்படைத்தார்.
6. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கார்த்திக் என்பவரை 16.05.2022 அன்று

விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அன்றைய தினமே இந்த விபத்து வழக்கில் உட்படுத்தப்பட்ட TN 40 F 5843 மகேந்திரா பிக்கப் இருச்சக்கர வாகனத்தை ஆய்வுசெய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. இந்த வழக்கில் காயம்பட்ட கோபால் என்பவருக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த மருத்துவர் பிரதாப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். **மேட்டுர் அரசு மருத்துமவமனையில் கோபாலுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
8. இந்த வழக்கில் இறந்துபோன கோபால் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்கு மருத்துவரிடம் அடையாளம் காட்டி ஆஜர்படுத்திய காவலர் 2154 உமாசெல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து முதல் கட்ட விசாரணை முடித்து மேல்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. மகாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.
9. அன்றே இந்த வழக்கில் இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்துக்கொண்டு இந்த விபத்தை ஏற்படுத்திய ரகுபதி என்பவர் மீது ச.பி. 279, 304(A) ன் படி இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. மகேஷ்வரி, முனியம்மாள், சத்யா, சீரங்கன், மோகன்ராஜ் ஆகியோர்களை நான் விசாரித்தேன். எனக்கு முன்னர் விசாரணை செய்த அலுவரிடம் என்ன சொன்னார்களோ அதையே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. ஆனால் மகேஷ்வரி மற்றும் மாரியம்மாள் ஆகியோருக்கு மட்டும் மறுவாக்குமூலம் பதிவுசெய்துள்ளேன்.
2. குமார் என்பவர் தான் அ.சா.1 மகேஷ்வரிக்கு தகவல் கொடுத்ததாக எனது

விசாரணையில் சொல்லவில்லை. கண்ணூற்று சாட்சிகளான அ.சா.2 முனியம்மாள், அ.சா.3 சத்யா ஆகியோர் தாங்கள் வீட்டில் இருந்ததாகவும் சம்பவத்தை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் சொல்லியிருந்தால் அது தவறு. எதிரி ஓட்டிவந்த பிக்கப் வாகனத்திற்கு பின் வலதுபக்கம் மூன்றாவது போஸ்ட் அருகில் சிராய்ப்பு இருந்ததாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மிதிவண்டியில் சென்ற நபர் தடுமாறி கீழே தார் ரோட்டில் விழுந்து தலையில் அடிப்பட்டு இறந்துள்ளார் என்றாலும் அந்த விழுந்த சைக்கிள் தான் மேற்படி பிக்கப் வாகனத்தில் லேசாக மோதியது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் மிதிவண்டியை நான் கைப்பற்றினேன். அதை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்பதால் சம்மந்தப்பட்ட நபரிடம் திரும்ப ஒப்படைத்துவிட்டேன்.
4. நான் அவ்வாறு ஒப்படைத்தது தவறு என்றாலும் குற்ற வழக்கில் கைப்பற்றப்படும் அனைத்து பொருட்களையும் நீதிமன்றத்தில்தான் ஒப்படைக்க வேண்டுமென்றாலும், நீதிமன்ற உத்தரவில்லாமல் நான் சம்மந்தப்பட்ட நபருக்கு கொடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லையென்றாலும் சரியல்ல. மேற்படி மிதிவண்டியை கைப்பற்றி சம்மந்தப்பட்ட நபரிடம் ஒப்படைத்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தற்போது வழக்கு கோப்பில் இல்லை. புகைப்படம் எதுவும் தற்போது வழக்கு கோப்பில் இல்லை.
5. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றாலும் நான் குறிப்பிட்டவாறு இந்த வழக்கில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.
6. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் அந்த மிதிவண்டியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் அல்லது குறைந்தபட்சம் புகைப்படமாவது எடுத்து வைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.55 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.